# Issue 40

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
**e-mail: linus.daniel@hotmail.com**
http://tamil.icdelph.org/
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
The Christadelphians,
P.O. Box 4237, Bangalore 560-042
India
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
The Christadelphians,
P.O. Box 60, Negombo - 11500,
SRI LANKA.
Email: slcbm2@sltnet.lk


### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு


லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்

ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்

பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.


இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கடைசி இராப்போஜனம்

மாற்கு 14, கடைசி இராப்போஜனத்துக்கு முன் நடந்த சம்பவங்களை விவரிக்கிறது. அந்தக் காட்சியை கற்பனை செய்து பார்க்காமலேயே இராப்போஜனம் நடந்த சம்பவத்தை வாசித்து முடித்து விடுவது எளிதானது. ஆகவே அந்த மேலறையில் நடந்த உணர்ச்சி மிக்க சம்பவங்கள் ஒவ்வொன்றாக



நடந்ததை நாம் விளங்கிக் கொள்வதில்லை. அவைகளை நாம் திரும்பவும் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவோம். அச்சம்பவங்களின் நடைமுறை விளைவுகள் சிலவற்றையும் காண்போம்.

இயேசு சீஷர்களைப் போகச் சொன்ன இடத்திற்கு இருண்டிருந்த தெருக்கள் வழியே நடந்து சென்றிருந்திருக்க வேண்டும். இந்த இரவு உணவு குறித்து அவர்கள் ஆண்டவர் சமீபத்தில் என்ன சொன்னாரோ அதன் முக்கியத்துவம் குறித்து யோசித்தவாரே சீஷர்கள் கல்லால் ஆன மத்தைப் படிக்கட்டுகளில் நடந்திருக்க வேண்டும். மேல் படிக்கட்டின் மீது நின்று தோலினாலான கீல்களால் பொருத்தப்பட்ட கதவைத் திறந்திருக்கவேண்டும். அறையில் புகை பரவியிருந்தது. எண்ணெயில் எரியும் விளக்குகள் தங்கள் மங்கலான ஒளியை வீட்டின் கற்சுவர்களின் மீது வீசின. தலையிலே வைக்கோல் நிரப்பிய சாய்வதற்கான திண்டுகளும் பாய்களும் இருந்திருக்க வேண்டும்.

சீஷர்கள் புழுதிபடிந்த காலணிகளைக் கழற்றவும், இயேசு ஒரு பணியாளாக அவர்கள் பாதங்களைக் கழுவி துடைத்தார். அவர் இப்படிச் செய்தது



அவர்களுக்கு தர்மசங்கடமாயிருந்தது. ஆயினும் அவருடைய கரிசனையான அன்புக்குத் தங்களை இணங்கிக் கொடுத்தார்கள். மூலையிலிருந்த கூஜாவிலிருந்து நீர் எடுத்துத் தங்கள் கைகளைக் கழுவிக் கொண்டார்கள். உட்காரப் போகுமுன் அவர்களுக்குள் ஒரு வாக்குவாதம். ஆண்டவர் பக்கத்தில் யார் உட்காரலாம் என்பதற்காக, ஆண்டவர் எங்கே அமருவார் என யூகிக்க ஆரம்பித்தார்கள்.

இந்தப் பெரிய அறைக்குப் பக்கத்திலிருந்த சிறுஅறையில், பதிமூன்று ஆண்களுக்கு வேண்டிய உணவை இரண்டு, மூன்று பெண்கள் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். நெருப்புக்கான விறகு முதலிலேயே கொண்டு வரப்பட்டிருந்தது. காய்கறிகள் அவர்கள் வாழ்ந்த ஊர்களிலிருந்து கொண்டுவரப்பட்டன. ரொட்டி ஏற்கனவே சுடப்பட்டாயிற்று. அது சுடப்பட்ட மணமும் காய்கறிகளின் மணமும் கவர்ந்திழுத்தது. தோல் துருத்தி ஒன்றில் திராட்சரசம் சீஷர்களில் ஒருவனால் மேலறைக்குக் கொண்டுவரப்பட்டு பள பளக்கும் குவளைகளில் ஊற்றப்பட்டு அறையில் உள்ளவர்களுக்குக் கடத்தப்பட்டது.

பயமும் நிச்சயமற்றதன்மையும் கலந்த ஒரு எதிர்பார்ப்பு அங்கு நிலவியது. உரையாடல்கள் மெதுவான சப்தத்தில் நிகழ்ந்தன. என்ன நடக்கப்போகிறது என்பது யாருக்குமே நிச்சயமாகத் தெரியவில்லை. பஸ்கா விருந்துக்காகத் தான்



அவர்கள் திட்டமிட்டதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த இராவிருந்து ஒரு நாள் முந்தி நடக்கப்போகிறது. இது எவ்வளவு சரியாய் இல்லையே.


சூடான உணவு பரிமாறப் பட்டிருக்கலாம். பஸ்கா விருந்து மாதிரி கசப்பான கீரை, புளிப்பில்லாத அப்பத்தோடு செரிமானத்திற்காகப் பலகுவளை திராட்ச ரசம் ஆகிய எல்லாமே இருந்தது. சாப்பிட்டுக் கொண்டே தங்களுக்குள் மெலிதான குரலில் பேசிக்கொண்டார்கள். அப்பொழுது அவர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக் கொடுக்கப் போவதாக இயேசுவானவர் அறிவித்தார். ஒரு துணிக்கை அப்பத்தை அவர் யூதாசுக்குக் கொடுத்தார். அவன் அதை வாங்கியபின், அரவமில்லாமல் இருண்ட இரவுக்குள் போய்விட்டான்.

முதலில் ஒவ்வொருவரும் தான் தான் காட்டிக் கொடுப்பவனோ என எண்ணினார்கள். ஆனால் கடைசியில் யூதாஸ் தான் காட்டிக் கொடுப்பவன் எனத் தெரிந்ததும் காட்டிக்கொடுப்பது பற்றி வியப்பும் கவலையும் சேர்ந்து கோபத்தால் நிறைந்தவர்களாயினர்.

இயேசுவானவர் தொடர்ந்து அவர்களுக்குப் போதித்தார். அவர்களின் ஆண்டவர் தமது மெய்யான சுபாவம், தமது தியாகம் மற்றும் தமது உயிர்த்தெழுதல் பற்றிப் பேசிய பொழுது அவர்கள் கண்கள் தங்கள் ஆண்டவரில் நிலைத்து நினறிருக்க வேம்டும். அர்ப்பணிப்புடன் அவருடைய வேலையில் இதுவரை அவர்கள் அனுபவித்திராத பங்களிப்புடன் செயல்பட வேண்டுமென்ற உள எழுச்சி அங்கு இருந்தது. அதிகமான விழிப்புணர்வு இருந்த இந்த சமயத்திலும் கூட அங்கே சந்தேகங்களும் நிச்சயமற்ற தன்மைகளும் நிலவத்தான் செய்தன.

பின்னர் இயேசு அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து, பிட்டு சீஷர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். கடைசியிலிருந்த திராட்சரசத்தை எடுத்து, ஆசீர்வதித்து, சீஷர்கள் மத்தியில் அதைக்கடந்து போகக் கொடுத்தார். அவர்களெல்லாரும் திராட்ச ரசத்தை அருந்துவதில் பங்கு பெற்றார்கள். ஒரு பாட்டைப் பாடின பின்பு அவர்கள் கெத்சேமனேக்குப் போனார்கள். இராவிருந்தின் போதும், சாலையில் நடக்கும் போதும் இயேசு அநேகக் காரியங்களை அவர்களுக்குப் போதித்தார். பயத்தோடும் நடுக்கத்தோடும் அவர்கள் கவனித்தார்கள் என்பது திண்ணம்.

பலவிதங்களில், இது ஒரு சாதாரண உணவு. குழுவாக ஆண்கள் கூடி உணவையும் திராட்ச ரசத்தையும் பகிர்ந்து கொண்டு உரையாடுவது போலத்தான். வருடத்தின் இந்த சமயத்தில் சேர்ந்து விசேஷ உணவு அருந்துவது வழக்கமானது. இன்னொரு விதத்தில் பார்க்கப்போனால், இதைப் போல




இன்னொரு விருந்து கிடையாது. இது விசேஷித்தது.

உணவு அருந்திய நேரம் முக்கியத்துவம் வாய்ந்தது. பஸ்கா பண்டிகை சமயத்தில் ஆனால் பிரதான பஸ்கா விருந்து நேரத்தில் அல்ல. சொல்லப் போனால் தேவாலயப் பிரகாரங்களில் பஸ்கா ஆட்டுக்குட்டிகள் அடிக்கப்படும். அதே நேரத்தில் தான் இயேசு பலியிட்டார். இருப்பினும் பஸ்காவின் அடையாளங்களெல்லாம் அவரில் நிறைவேற்றப்பட வேண்டியதாயிருந்தது. அவருடைய சரீரம் தான் "பிட்கப்பட்ட அப்பம்" அவரே ஜீவ அப்பம். அவரே தான் ஆட்டுக்குட்டி, தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆயத்தமாக்கப்பட்டவருமான "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்க" நியமிக்கப்பட்ட "தேவ ஆட்டுக்குட்டி" அவரே சுத்தமானதும் பழுதற்றதுமான ஆட்டுக்குட்டி காலங்கள் தோன்று முன்னமே நியமிக்கப்பட்டவர். அவரே நமக்காகப் பலியிடப்பட்ட பஸ்காவாகிய கிறிஸ்து (1கொரி 5,7) அவரே பரித்தோலிருந்து எழுப்பப்படவேண்டிய ஆட்டுக்குட்டியானார். தேவனுடைய சிங்காசனத்திற்கு உயர்த்தப்படத் தக்கவராய் மகிமைப்படப் போகிறவரான ஆட்டுக்குட்டி அவர். அப்போஸ்தலனாகிய யோவான் 5 6ல் விவரிக்கப்பட்டவரும் அவரே. "இதோ அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பர்களுக்கும் மத்தியில் நிற்கக் கண்டேன்." அவரே "மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர். அவருக்கு இனி ஒரு போது சாக வேண்டிய அவசியமில்லாத சாவாமை



கொடுக்கபட்டிருக்கிறது."

இவைகளைத்தான் இயேசு தம் சீஷர்களுக்கு உணவு வேளையில் போதும், எருசலேமின் தெருக்களிலும் கெதரோன் ஆற்றைக் கடந்த கெத்சேமெனேக்குப் போகும்போதும் போதித்தார். (யோ 13:31-17:3)

இருப்பினும் கடைசி இராவிருந்திற்குச் செல்வோம் அது ஒரு சாதாரண உணவு என்றாலும் உணர்ச்சிப் பெருக்கும் கொந்தளிப்பும் நிலவியது. நாம் அங்கிருந்தால் என்னவென்று உணர்ந்திருப்போம்?

ஆண்டவர் நம் கால்களைக் கழுவ அனுமதித்தோமே என சங்கடப்பட்டிருப்போமா? உணவு ஆயத்தம் செய்ய உதவி செய்திருப்போமா? அல்லது யாராவது எல்லாவற்றையும் ஆயத்தம் செய்திருப்பார்கள் என்று சொல்லி கடைசி நிமிடம் அந்த இரா விருந்தில் கலந்து கொள்ள வந்திருப்போமா? பதவிக்காக முண்டியருடித்துக் கொண்டு, கலந்துரையாடலில் நாமும் சேர்ந்து கொள்ளத் தக்கதாக ஆண்டவரின் வலது பக்கத்தில் அமர முயன்றிருப்போமா? அல்லது அவர் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு அதே சமயம், அந்தப் போதனையின்படி நாம் நடக்கவேண்டிய அரசியம் மற்றும் தியாகம் நமக்குத் தேவைப்படாது என்று நினைத்துக் கொள்வோமா? நம்மில் ஒவ்வொருவரும் ஆழமான விசனத்தோடு இயேசுவை 'நான்' கட்டிக் கொடுத்து விடுவேனோ என நினைப்போமா? பேதுருவைப் போல நாமும் எல்லாவற்றையும் இழந்தாலும் நம் ஆண்டவரும் எஜமானவருமானவரை மறுதலிக்க மாட்டோம் என்போமா?

நாம் அங்கு இருந்திருந்தால், எது சரியோ அதைச் செய்ய முயன்றிருப்போம். ஆண்டவரின் உயர்ந்த அளவை அடையமுடியாமல் தோற்றுப் போயிருப்போம். திட்டமாக, நாமும் ஏதோ ஒரு வகையில் யூதாவைப் போலவும் பேதுருவைப் போலவும் இருந்திருப்போம். அவர்களைப் போலவே நாமும் பெலனற்ற, தவறு செய்பவர்களாய் பாவம் செய்யக்கூடியவர்களாய், தோற்றுப் போகிறவர்களாய், இருந்திருப்போம். ஒருவன் கட்டிக்கொடுத்து, மன்னிப்பை நாடாமற் போனான். அடுத்தவன் மறுதலித்து மனந்திரும்பினான். ஒருவன் மரித்தான். மற்றவன் உயிரோடிருந்தான். நாம் கட்டிக் கொடுத்தேமோ மறுதலித்தோமோ - எதுவாயிருந்தாலும், நாம் கர்த்தரன் பந்திக்கு வருகிறோம். கர்த்தர் அப்பத்தையும் திராட்சரசத்தையும் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். நாமும் நன்றியோடு அதைப் பெற்றுக் கொள்கிறோம். தேவ ஆட்டுக்குட்டியாகிய அவரில் நாம் மன்னிக்கப்படுகிறோம். புது உற்சாகம் பெறுகிறோம், இந்தத் திருவிருந்தால் புத்துயிர் பெறுகிறோம். இது ஒரு எளிய சாதாரணமான உணவு. இருப்பினும் ஏராளமான ஆவிக்குரிய பாடங்களை அது போதிக்கிறது.

**காலின் எட்வர்ட்ஸ்**

பகுதி மூன்று

# தேவனுடைய புதிய சமுதாயம்

கிறிஸ்தவம் ‘கடந்த காலத்திற்குரியது’ எனவே இக்காலத்திற்குரியதல்ல எனக் கருதப்படலாம். ஆனால் உண்மையில் இக்காலத்திற்கும் முந்தியது. புரட்சிகரமானது. தனித்தன்மை வாய்ந்த ஒன்றை அது நமக்கு அளிக்கிது. அது அறிமுகப்படுத்திய வாழக்கை நெறியைக் காட்டிலும் சிறந்தது இதுவரை வேறெதுவும் இல்லை. அதை நமக்கு வாழ்ந்து காட்டியவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. இயேசு தோற்றுவித்த இந்தப் புதிய சமுதாயம் யூதர்களுக்குப் போலவே புறஜாதியாருக்கும் திறந்ததாக இருக்கிறது எப்படி எனடாம் பர்லிங் காட்டுகிறார்.

### இயேசுவுக்குச் செவிகொடுப்பது.

யோவான் 10ல் எழுதப்பட்டுள்ள நல்ல மேய்ப்பன் உவமையின் இறுதிப் பாடத்தை நாம் கவனியாமல் விட்டுவிடக் கூடாது. அங்கே இயேசு தம் ஆடுகள் தமக்குச் செவிகொடுக்கின்றன என அடிக்கடி கூறுகிறார். அவை அவர் சொல்வதைக் கேட்டு, அவர் நடத்துகிறபடி செய்கின்றன. இதன் முக்கியத்துவத்தை நாம் மிகைப்படுத்த முடியாது. தேவனின் புதிய சமுதாயத்தின் உறுப்பினர்களாக நாம் விரும்பினால், இயேசுவின் போதனையைக் கேட்டு, அவர் சொல்கிறபடியே செய்ய வேண்டும். இந்த வார்த்தைகளைக் கவனிப்போம்.

“என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை





அறிந்திருக்கிறேன்; அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என்கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை.” (யோவான் 10:27-28)

இந்த வாக்குத்தத்தத்தை நாம் கவினிக்க வேண்டியது அவசியம்; ஆண்டவர் இயேசு தம்மைப் பின்பற்றுவோர் தம் சத்தத்தைக் கேட்டு, அவர் சொற்படி செய்வார்களென்றால், அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கூடும் என உறுதியளிக்கிறார். இது ஒரு தனித்தன்மை வாய்ந்த கூற்று. ஆண்டவரின் கூற்றுகளில் நாம் முழு நம்பிக்கை வைக்கலாம் என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன.


### வளர்ந்து வரும் தேவனின் நோக்கம்

இப்பொழுது, கர்த்தருடைய ஊழியத்தின் பிற்பகுதியில் நடந்த இரு சம்பவங்களுக்கு நேராக நம் கரனத்தைத் திருப்புவோம். அவை தேவனின் சமுதாயம் என்ற நம் தலைப்போடு தொடர்புடையவை. அதே சமயம் மனிதகுலத்தோடு தேவன் கொண்டுள்ள நோக்கத்தின் எதிர்கால வளர்ச்சியை இயேசு எங்ஙனம் முன்கூட்டியே கண்டார் எனவும் காட்டுகின்றன. முதலில் யோவான் 12ல் எழுதப்பட்ட சம்பவத்தைக் காண்போம். எருசலேமிலுள்ளை கிரேக்கர்கள் பஸ்கா பண்டிகையின் போது தேவனைத் தொழுதுகொள்ள வந்திருக்கிறார்கள்.

எகிப்திலிருந்து  மக்கள் விடுதலை யானதை நினைவு கூரும் பொருட்டுவசந்த காலத்தில் கொண்டாடப் படும் யூதப் பண்டிகை பஸ்கா. கர்த்த ராகிய இயேசுவின் மரணத்திற்கு முன் இது கொண்டாடப்பட்டது. இந்த கிரேக்கர்கள் பிலிப்புவிடம் வந்து தாங்கள் இயேசுவைக் காண விரும்புவதாகக் கூறினார்கள். (12:20-21) அந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தக் கிரேக்கர்களுக்கு அநேக சுவையான காரியங்களைக் கர்த்தர் கூறினார். ஆனால் நாம் அவர் கூறியவைகளில் ஒன்றினைக் கருத்தாய்க் கவனிப்போம்.

‘‘நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்.” (12-32–33)

தாம் சிலுவையில் அடிக்கப்பட்டு தூக்கிநிறுத்தப் படப் போவதைக் கர்த்தர் ‘உயர்த்தப்படுவது’ என்று கூறினார். இதற்கு முன்னும் அவர் அதே வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்.” (யோவான் 3:14-15). இங்கே, ஊழியத்தின் ஆரம்பக் கட்டத்திலே, சிலுவையிலே கர்த்தரின் தியாகபலி



cc-art.com

நித்தியஜீவனுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்கிறது. (வ.15). யோவான் 8:28லும் அவர் உயர்த்தப்படுவது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே கர்த்தராகிய இயேசு தாம் சிலுவையிலே பலியாவது உலகமனைத்துக்கும் உரியது என நன்கு அறிந்திருந்தார். ஏனெனில் ''எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமை யற்றவர்களானார்கள்.'' (ரோமர் 3:23).

**திராட்சத்தோட்டம் பற்றிய உவமை**

சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ள இன்னொரு உவமை திராட்சத்தோட்டமும் அதன் உரிமையாளரும் பற்றியது. இது எந்த அளவிற்கு முக்கிய மென்றால், முதல் மூன்று சுவிசேஷங்களிலும் இந்த உவமை இடம் பெற்றிருக்கிறது. (மத்தேயு 21:33-41, மாற்கு 12:1-9, லூக் 20:9-16).

மனதைத் தொடும் இந்த உவமையில் கர்த்தர் யூதமக்களிடம் தேவன் செய்த கிரியைகளை மீள்பார்வை செய்கிறார். எகிப்திலிருந்த அடிமைக்கட்டிலிருந்து அவர்களை விடுவித்து, வாக்குத்தத்த பூமிக்குக் கொண்டுவந்தார். அங்கே அவர்களைக் குடியமர்த்தினார். வாடகைக்குப் பதில் தேவன் அவர்களிடம் கனியைக் கேட்டார். ஆனால் அவர்களோ அவருடைய பிரிதிரிதிகளை ஒதுக்கித்தள்ளி, அவர்களெல்லாரையும் அவமானப்படுத்தி விட்டார்கள். கடைசி முயற்சியாக, நில உரிமையாளர் தன் சொந்த மகனும் சுதந்தரவாளியுமானவனை அனுப்பியும் பயனில்லாமல் போயிற்று. அவர்கள் அவனைப் பிடித்துக் கொன்று போட்டார்கள். மக்கள் அவர் கூறியதைக் கவனித்துக் கேட்டபின் இயேசு அவர்களிடம் ஓர் எளிய கேள்வியைக் கேட்டார்.

“அப்படியிருக்க, திராட்சத் தோட்டத்தின் எஜமான் வரும் போது, அந்தத்



தோட்டக்காரரை என்ன செய்வான்” என்று கேட்டார்.

விடை தெரிந்ததுதான்; அறியாமலேயே கர்த்தரின் பேச்சைக் கேட்ட யூதமக்கள், தங்கள் தேசத்தின் மீது அவர்களே நியாயத் தீர்ப்பைக் கூறிவிடுகிறார்கள்.

அதற்கு அவர்கள், அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, பெற்றகாலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்குத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்த்தைக் குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள். (வ.41)

உண்மையிலேயே விசேஷித்த இந்த உவமையின் பொருள் என்ன என்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். ஆபிரகாமின் காலத்திலிருந்து 2000 ஆண்டுகளாக தேவன் யூத மக்களிடம் பிரத்தியேகமாக கிரியை செய்து வந்திருந்தார். ஆண்டவரின் முதாதையர்களில் ஒருவளான மோவாபியப் பெண்ணாகிய ரூத் போல, சில (மத் 1:5) விதிவிலக்குகள் இருந்தது உண்மை யெனினும், தேவனுடைய வெளிப்பாட்டைப் பொறுத்தவரை, யூதர்களைத் தான் தேவன் பயன்படுத்தினார். இத்தனை சிலாக்கியம் பெற்ற மக்களாக, அவர்கள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கும்படி எதிர்பார்க்கப்பட்டார்கள். ஆனால் உவமை காட்டுகிறபடி அவர்கள் அதில் தவறிவிட்டார்கள்.

ஆகவே எல்லைமே மாறவேண்டியதாயிற்று. தேவன் அவர்களை விட்டுப் போகவேண்டியதாயிற்று. அவர்கள் அனுபவித்து வந்த சிலாக்கியங்கள் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டியதாயிற்று. கர்த்தரின் தீர்க்கதரிசனம் ஏறத்தாழ கி.பி.30ல் உரைக்கப்பட்ட தென்று நாம் கொண்டால், அந்த நூற்றாண்டின் இறுதிக்குள் ஒரு புதிய சமுதாயம் உதயமாயிற்று - கிறிஸ்தவசபை - இதில் நாம் ஏற்கனவே பார்த்தபடி, யூதர்களும், புறஜாதியாகும், ஆண்களும் பெண்களும், அடிமையும் சுயாதீனனும் (கலாத்தியர் 3:28) இருந்தார்கள். இனம், சமுதாய அந்தஸ்து போன்றவை மறைந்து போயின. அவர்களை ஒருமிக்க இணைத்த சக்தி கர்த்தராகிய இயேசு “கிறிஸ்துவே எல்லாமும் எல்லாரிலும் இருக்கிறார்.”

**எருசலேம் அழிக்கப்பட்டது.**

சில விதிவிலக்குகளைத் தவிர, இயேசுவைப் புறக்கணித்த யூதமக்களுக்கு இந்த எழுபது ஆண்டுகளில் என்ன நடந்தது? அவர்கள் தேவகுமாரனைப் புறக்கணித்தது மட்டுமல்ல சிலுவையிலும் கூட அறைந்தார்களே. பெருமைக்காரமக்களாக இருந்த அவர்கள் தங்கள் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்ட ரோமர்களுக்கு அடிமைகளாக இருப்பதை வெறுத்தார்கள். நிம்மதியற்ற சிலகாலத்திற்கு பின் கி.பி. 70ல் அவர்கள் ரோமர்களுக்கு எதிராய் கலகம்

பண்ணினார்கள். இதன் விளைவாய் எருசலேம் வெகுகாலம் முற்றுகை போடப்பட்டிருந்தது. அதனால் அதிகமாகத் துன்புற்றார்கள். இறுதியில் எருசலேம் பிடிபட்டு, நகரம் அழிக்கப்பட்டது. யூதர்கள் எவ்வளவோ பெருமைப் பட்டுக்கொண்டிருந்த தேவாலயமும் அழிந்தது. ஆயிரக்கணக்கான யூதர்கள் அடிமைகளானார்கள்.

இதிலே நாம் கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில் யூதமக்களைக் மேற்கொள்ளப் போகும் துக்ககரமான சம்பவத்தைக் கர்த்தராகிய இயேசு முன்னறிவித்த விதம்தான். தனித்தன்மை வாய்ந்த அவரின் முன்னறிவைக் குறித்து நாம் வியப்படைகிறோம். தெய்வீக உள்ளுனர் வினாலேயே அவர் பேசினார். தமது சொந்த ஜனங்கள் அனுபவிக்கப் போகிற துக்ககரமான சம்பவங்களை முன்னறிவிப்பதில் கர்த்தராகிய இயேசுவுக்கு எந்த இன்பமோ மகிழ்ச்சியோ இல்லை. சொல்லப்போனால் அது அவருக்கு மிகுந்த வேதனையளித்தது. எருசலேமை நோக்கி அவர்சென்ற கடைசிப் பயணத்தில், அவரைப் புறக்கணிக்கப் போகிற, கொல்லப்போகிற நகரத்தைக் கண்டதும், அவர் என்ன செய்தார்? அவர் ஆழமாக உணர்ச்சிவசப்பட்டவராய் இந்த வார்த்தைகளைப் பகர்ந்தார்.

“எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்.” (மத்தேயு 23:37,38)

பின்பு, கல்வாரிச் சிலுவை நோக்கி அவர் செல்லும் வழியில் அவருக்கு நேரிடப் போகிறதை அறிந்து அழுது கொண்டிருந்த பெண்களிடமாய் அவர் திரும்பி, ‘‘எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.” (லூக்கா 23:28)

நாம் தேவனின் புதிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாயிருக்க விரும்பினால் ஆண்டவர் இயேசுவின் போதனைகளை மட்டுமல்ல, அவரது முன்மாதிரியையும் பின்பற்ற வேண்டும். நமது அடுத்த பாடத்தில் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையிலிருந்த பெரும் தடை எவ்விதம் உடைபட்டது எனக் காண்போம். அநேக முறைகளில் இது ஒரு எழுச்சியூட்டும் வரலாற்றுச் சம்பவமாகும்.

**- டாம் பர்லிங்.**



# ஒருவருக்கொருவர் தயவாயிருங்கள்



“இன்று காலை தொடங்கி, நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரும் இன்று நடு இரவுக்குள் மரித்துவிடுவார்கள் என்று எண்ணி, அவர்களிடம் தயவாய் நடந்து கொள்ளுங்கள். எல்லாப் பராமரிப்பையும், கனிவான தயவையும், புரிந்துக்கொள்ளுதலையும், எவ்வளவு முடியுமோ, அவ்வளவு காட்டுங்கள். எந்த பதில் நன்மையையும் எதிர்பாராமல் செய்யுங்கள். உங்கள் வாழ்க்கை முற்றிலும் மாறிவிடும்’’ இது ஒக் மன்டினோவின் கூற்று.

இக் கூற்றின் உண்மையை ஒரு வலிதரும் வழியில் தான் கற்றுக்கொண்டேன். என் தகப்பனார் மரிக்கவிருந்த நாளின் பிற்பகலில் அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன். உற்சாகமாக இருந்தார். அதிகநேரம் நாங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. மருத்துவரைச் சந்திக்கக் காத்திருந்தோம். சில சோதனைகள் செய்ய சோதனைக்கூடத்தில் காத்திருந்தோம். திரும்பவும் மருத்துவரிடம் வந்து இன்னும் காத்திருந்தோம். சில வாரங்கள் கழித்து சின்ன அறுவை சிகிச்சை செய்ய ஒழுங்கு செய்யப்பட்டது. ஆகவே அவரை மறுபடியும் காரில் வீட்டிற்குக் கொண்டு வந்தேன். அவர்களைப் படைத்திருந்தார். அலைச்சலால் தான் என்றெண்ணிக் கவலைப்படவில்லை. இரவு உணவு அருந்தி, தொலைக்காட்சியைச் சற்று நேரம் பார்த்துவிட்டு, சரியான நேரம் தூங்கச் சென்றார். அப்புறம் அவர் எழும்பவே இல்லை.

மருத்துவர்களுக்காகவும், சோதனைக்கூட வல்லுநர்களுக்காகவும் காத்திருக்கும் நேரங்களில் செய்யக்கூடிய சிலவேலைகளைக் கொண்டு போயிருந்தேன். மறுநாள் விடிவதற்குள் அவர் இறந்து விடுவார் என்று நான் சற்றும் நினைக்கவில்லை. அது மட்டும் தெரிந்திருந்தால் அந்த விலைமதிப்பான கடைசி மணி நேரங்களை அவரோடு உரையாடிக் கழித்திருப்பேன்.

மேற்கூறிய கூற்றின் கருத்து என்னவெனில் நடு இரவுக்குள் இறந்து

போய்விடுவார்கள் போலிருக்கிறதே என்ற எண்ணத்தோடு நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் நடத்த வேண்டும். அப்படிச் செய்தால், யோசித்துப் பாருங்கள். எவ்வளவு கருத்தோடு கண்ணியமாக இருந்திருப்போம். அவர்கள் சொல்ல இருந்ததைக் கவனமாகக் கேட்டிருப்போம். அவர்கள் மென்மையான உணர்வுகளை அறிந்திருப்போம். நமக்குண்டான எல்லா தயவையும் புரிந்துக்கொள்ளுதலையும் காட்டியிருப்போம்.

நம் பரமபிதாவுக்கு நம் அன்பை எப்படிக் காட்டுவோம். அவருடைய பிள்ளைகளில் சிலரிடம் தயவாயிருப்பதன் மூலமே பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்கள் அவருடையவைகள் என சங்கீதக்காரன் பாடுகிறான். ஆகவே வானத்தையும் பூமியையும் படைத்தவருக்கு நாம் என்ன கொடுக்க முடியும்? நாம் அவருடைய பேரால் அவருடைய மக்களுக்குக் குளிர்ந்த நீரை அவர்கள் தாகம் தணிக்கக் கொடுக்க முடியும். இந்தப் பாடத்தைத் தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கற்றுக்கொடுத்தார்.

நாமெல்லாருமே இதை ஏட்டளவில் அறிவோம். ஆனால் அது போதாதது. நமக்குத் தெரிந்திருக்கும் எத்தனையோ காரியங்களை நாம் செய்வதில்லை. விஷயங்களைத் தெரிந்துக் கொள்வது முக்கியம். ஆனால் அவைகளைச் செய்வது அத்தியாவசம்.

ஆரம்பத்தில் கூறியுள்ளதை நாம் பின்பற்றுவது ஞானமாகும். நாம் என்று மரிப்போம் என்று நம்மில் யாருக்குமே தெரியாது. ஆனால் நாம் இன்று தான் கடைசியாக ஒருவரை ஒருவர் பார்க்கிறோம் என்று நினைத்து ஒருவரை ஒருவர் அன்பாகவும் தயவாகவும் நடத்தினால்தான் நமக்கு வாழ்க்கை முற்றிலும் மாறிவிடும்.

நாம் இவ்வளவு அன்பாக ஒருவரை நடத்தி, அவர் இரவில் சாகாமல் வாழ்கிறாரென்றால் நாம் இழப்பது யாது? எதையும் இழப்பதில்லை. லாபம் தான் அதிகம். ஏனெனில் நாம் அவர்களை நடத்திய விதமாகவே நாமும் நடத்தப்படுவோம்.

ஒரு சின்ன பையன் செய்த ஜெபத்தை நாமெல்லாரும் அறிவோம். "தயவு செய்து எல்லா கெட்ட மனிதர்களையெல்லாம் நல்லவர்களாக்கும், நல்லவர்களை இனியவர்களாக்கும்" சிலரின் கோட்பாடுகளெல்லாம் சரியானவைகளாக இருக்கலாம். ஆனால் பரமபிதாவின் பிள்ளைகளிடம் தயவற்றவர்களாயிருப்பார்கள்.

பவுல் சொல்கிறதாவது, "ஒருவருக்கொருவர் தயவாவும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்", "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது", என்றும் பவுல் கூறுகிறார். "நம் ஆண்டவரும், தேவன், நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறவராயிருக்கிறார். உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என்று நமக்கு கூறியுள்ளார். நியாயாசனத்தைப் பற்றி நம் ஆண்டவர் கொடுக்கும் ஒரே காட்சி நாம் பிறரை நடத்தியது பற்றியே - நாம் செய்தது என்ன? செய்யாதது என்ன?



நாம் இப்பொழுது ஒருவருக்கொருவர் எவ்வளவு இரக்கம் காட்டுகிறோமோ அவ்வளவே நியாயத்தீர்ப்பின் போது பெறுவோம் என்பதை நாமே நிர்ணயித்துக் கொள்கிறோம். "நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்". "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவராயிருங்கள்."

---

We are all determining the amount of mercy we are going to receive at the judgment seat by the amount of mercy we now show to each other. "For the same measure that ye mete withal it shall be measured to you again." "Be ye therefore merciful, as your Father also is merciful."

# Reading and Reflection

### QUOTE 1: GOD'S PROMISE TO ABRAHAM

Genesis 12:1-5

Gen. 12:1 கர்த்தர் ஆபிராமை நோக்கி, நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ.

Gen. 12:2 நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கா, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

Gen. 12:3 உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

Gen. 12:4 கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான். லோத்தும் அவனோடேகூடப் போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்.

Gen. 12:5 ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய

குமாரனாகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக் கொண்டு, அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள்.

## QUOTE 2: MORE PROMISES TO ABRAHAM


Genesis 13:14-17

Gen. 13:14 லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி, உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.

Gen. 13:15 நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து,

Gen. 13:16 உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன். ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்.

Gen. 13:17 நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அமமட்டும் நடந்து திரி, உனக்கு அதைத் தருவேன் என்றார்.





## QUOTE 3: ABRAHAM - FATHER OF NATIONS

Genesis 17:1-12

Gen. 17:1 ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி நான் சர்வல்லமையுள்ள தேவன், நீ தேவன் எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு.

Gen. 17:5 இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்.

Gen. 17:6 உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன். உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்.

Gen. 17:7 உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்திக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையைக ஸ்தாபிப்பேன்.

Gen. 17:8 நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்.

Gen. 17:9 பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி, இப்பொழுது நீயும், உனக்குப் பின் தலைமுறையாக வரும் உன் சந்ததியும் என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள்.

Gen. 17:10 எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறது. நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்.

Gen. 17:11 உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.

Gen. 17:12 உங்களில் தலமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம்நாளிலே விருத்தசேதனம்

பண்ணப்படவேண்டும். வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப்பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்.

**How would you feel about leaving your land and your family to go to a place you know nothing about? What motivated Abraham to obey such a command from God? (consider Quote 1)**

I would need to believe that some substantial benefit would result from it, or I wouldn't do it.
Abraham had faith in God's promise and he showed this by his willingness to go where God told him, and to do what God asked. He showed his faith was real by his actions.

It is very important that faith is not just words but also shown in action. The letter of James gives an example of how fruitless it would be if faith were not followed by action.

"*My brothers and sisters, what good does it do if someone claims to have faith but doesn't do any good things? Can this kind of faith save him? Suppose a believer, whether a man or a woman, needs clothes or food and one of you tells that person, "God be with you! Stay warm, and make sure you eat enough." If you don't provide for that person's physical needs, what good does it do? In the same way, faith by itself is dead if it doesn't cause you to do any good things."* James 2:14-17

*"You fool! Do you have to be shown* ***that faith which does nothing is useless****? Didn't our ancestor Abraham receive God's approval as a result of what he did when he offered his son Isaac as a sacrifice on the altar? You see that Abraham's faith and what he did worked together. His faith was shown to be genuine by what he did. The Scripture passage came true. It says, "Abraham believed God, and that faith was regarded by God to be his approval of Abraham." So Abraham was called God's friend. You see that a person receives God's approval because of what he does, not only because of what he believes.*" James 2:20-24



**List 3 things that God promised to Abraham from Quotes 1,2 and 3. Include promises relating to land as well as people.**

1. That God would bless him, and make his name great.
2. That God would give him offspring (a seed), who would be the means of blessing all nations.
3. That God would give him the land of Canaan as an everlasting possession.
4. He would become the father of a son, and also the father of many nations.